இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 27-09-2024

# ஐரோப்பிய உடையில் சனாதனச் சரக்கு

மதச்சார்பின்மை என்பது ஐரோப்பியச் சரக்கு என்றும், அது இந்தியாவுக்குத் தேவையில்லை என்றும் மாஜி ஐ.பி.எஸ். அதிகாரியும் இன்றைய சனாதனக் காவலருமான ஆர்.என்.ரவி சொல்லி இருக்கிறார்.

அவர் அணிந்திருக்கும் கோட், சூட் தான் ஐரோப்பியச் சரக்கு என்று மிகச்சரியாகச் சொல்லி இருக்கிறார் எழுத்தாளர் ஆதவன் தீட்சண்டா. அது மட்டுமா? ஆர்.என்.ரவி படித்த படிப்பான ஐ.பி.எஸ்ஸும் ஐரோப்பிய சரக்குதான். அவர் இப்போது வகித்து வரும் கவர்னர் பதவியே ஐரோப்பியச் சரக்குதான். கவர்னர், கவர்னர் ஜெனரல் எல்லாம் பிரிட்டிஷாரின் உருவாக்கமே. ஆனால் பிரிட்டிஷார்தான் இந்த நாட்டைக் கெடுத்ததாக மேடைகளில் சொல்லி வருகிறார்.

**இவர் சனாதனம் என்று சொல்லி வரும் மனித அடிமைத்தன கருத்துருவாக்கத்துக்கு எதிரான சட்டங்களைக்கொண்டு வந்ததால்தான் பிரிட்டிஷார் மீது இவர்களுக்கு ஆற்றமுடியாத கோபம். ஆட்சியைக் கொடுத்துவிட்டு பிரிட்டிஷார் போன பிறகும் திட்டிக் கொண்டிருக்கக் காரணம், அனைவருக்கும் பொதுவான சட்டத்தை இந்தியாவில் கொண்டு வந்து விட்டார்களே என்பதால்தான்.**

“இந்த நாட்டு மக்களுக்கு ஏராளமான மோசடிகள் நடந்துள்ளது. அதில் ஒன்று மதச்சார்பின்மை என்பது ஆகும். மதச்சார்பின்மை என்றால் என்ன? மதச்சார்பின்மை என்பது ஐரோப்பியக் கருத்து. அது இந்தியக் கருத்து அல்ல. ஐரோப்பாவில் மன்னருக்கும், சர்ச்சுகளுக்கும் இடையில் சண்டை வந்ததால் மதச்சார்பின்மை வந்தது. இந்தியா எப்படி தர்மத்திலிருந்து விலகி நிற்க முடியும்? இந்தியாவில் மதச்சார்பின்மை தேவையில்லை” என்று கன்னியாகுமரியில் சொல்லி இருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. இவர் இப்படிப் பேசியது அரசியலமைப்புச் சட்ட விரோதம் ஆகும்.

**அரசியலமைப்புச் சட்டப்படி நடப்பேன் என்று உறுதிமொழி ஏற்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட அவர், அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிராகப் பேசுவதே சட்டப்படி குற்றமாகும்.**

மதச்சார்பின்மை என்ற கருத்து ஏன் வருகிறது? பல்வேறு மதங்கள் இருப்பதால் வருகிறது. இந்தியாவில் பல்வேறு மதங்கள் இருக்கின்றன. அதனால், இங்கு அமையும் அரசானது எந்த மதத்தையும் சாராத அரசாக இருக்க வேண்டும் என்பதால் ‘மதச்சார்பின்மை’ என்ற தத்துவம் தேவைப்படுகிறது. இந்தியாவுக்குத்தான் இந்தத் தத்துவம் தேவை. அதுவும், மதத்தை அரசியலுக்குப் பயன்படுத்தும் பா.ஜ.க. போன்ற கட்சிகள் இருக்கும் இந்திய நாட்டில்தான் அது மிகமிக அவசியத் தேவையாகும்.

மதங்களிடம் இருந்து அரசு விலகி இருக்க வேண்டும். அப்போதுதான் அது உண்மையான, பொதுவான அரசாக இருக்க முடியும். அனைவருக்கும் பொதுவானதாக அரசு இருக்க முடியும். குறிப்பிட்ட மதம் ஆதிக்கம் செலுத்தும் அரசு, அனைவர்க்குமான அரசாக இருக்க முடியாது. குறிப்பிட்ட மதத்தின் அரசாகத்தான் இருக்க முடியும்.

அரசுகளிடம் இருந்து மதங்களும் விலகி இருக்க வேண்டும். அப்போதுதான், அது உண்மையான இறையியல் மதமாக, அது இருக்க முடியும். இல்லாவிட்டால் அரசு, அரசியலின், அதிகாரத்தின், அதிகார வர்க்கத்தின் குணம் மதத்துக்கும் வந்து விடும். மன அடிப்படையிலானது மதம். அது அரசில் ஆட்சி செலுத்த ஆரம்பித்தால் ஆதிக்க மதமாக மாறி விடும்.

எனவேதான் இரண்டையும் பிரித்து வைத்தார்கள் நம்முடைய முன்னோர்கள். ரவி சொல்வது போல இது ஐரோப்பியச் சரக்கல்ல. இந்தியச் சரக்குதான்.

“நானும் ஓர் சனாதன ஹிந்து” என்று சொல்லிக் கொண்டவர் தான் அண்ணல் காந்தியடிகள். அவரேதான், “வேதங்களுக்கு மட்டுமே தனித்து ஈசுவரத் தன்மை உண்டு என்று நான் கருதுவதில்லை. வேதங்களுக்கு எவ்வளவு ஈசுவரத்தன்மை உண்டோ அவ்வளவு ஈசுவரத் தன்மை கிறிஸ்துவ வேதமாகிய பைபிளுக்கும், முகமதியர் வேதமாகிய குர் ஆனுக்கும், பாரசீகரின் வேதமாகிய ஜெண்டவஸ்தாவுக்கும் உண்டு என்று கருதுபவன் நான்” என்றும் சொன்னார்.

“இந்தியாவில் இந்துக்கள் மட்டுமே இருக்க வேண்டுமென்று இந்துக்கள் கருதினால் அவர்கள் கனவு காண்பவர்கள் ஆவார்கள். இந்தியாவைத் தங்கள் தாய் நாடாக்கிக் கொண்ட இந்துக்களுக்கும், மகமதியர்களுக்கும், பார்சிகளும், கிறிஸ்தவர்களும் சகோதரர்கள் ஆவார்கள்” என்றவர் அவர். அதனால்தான் தேசத்தந்தை என்று அண்ணல் போற்றப்படுகிறார். ரவிகளின் அடையாளம் என்ன? ஐரோப்பிய உடையில் போலித் தத்துவங்களை விற்பது மட்டும் தான்.

இந்திய நாட்டை குறிப்பிட்ட ஒரு மதப் பெரும்பான்மை வாதத்தின் நாடாக மாற்றுவதற்கு ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நூறு ஆண்டுகளாக முயற்சித்து வருகிறது. அது நடக்கவில்லை. ஏனென்றால், இந்திய மக்களின் ரத்தத்தில் வேற்றுமையில் ஒற்றுமை காணும் தன்மை உள்ளது. ‘என் கடவுள் எனக்கு, உன் கடவுள் உனக்கு’ என்ற பரந்து பட்ட சிந்தனையானது இந்திய மக்களின் மனதில் உள்ளது. அதனால்தான் 100 ஆண்டுகளாக ஆர்.எஸ்.எஸ்.சித்தாந்தம் இங்கு மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறது.

**பிரச்சாரத்தின் மூலமாக இதைச் செய்வதில் தோற்றுப்போன பா.ஜ.க. மூதாதையர்கள், இப்போது அரசியல் மூலமாக ஆட்சியைப் பிடித்து அதிகாரத்தின்மூலமாக பாசிசத்தை ஆட்சியில்நிலைநிறுத்தப்பார்க்கிறார்கள். ‘மதச்சார்பின்மை’ என்ற சொல்லுக்கு எதிராக கவர்னர் பதவியில் இருந்து கொண்டு பேசுவதை, ‘நிர்வாக நடவடிக்கைகளில் ஒன்றாக’ மாற்றிக் காட்ட நினைக்கிறார் ரவி. அவர் என்னவாக நினைத்துச் சொன்னாலும் தமிழ்நாட்டில் அவர் பேச்சுக்கு அரையணா மரியாதை கூட கிடைக்காது. யூ டியூப்புகளுக்கு அவர் ஒரு நாள் கண்டெண்ட் ஆகலாம்!**

**அவர் இப்படிப் பேசுவதே யூ டியூப் ஸ்டார் ஆவதற்காகத்தான்.**

●●

## ஜம்மு – காஷ்மீருக்கு மாநில அந்தஸ்தை மீட்டெடுக்க

# வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவோம்!

## தேர்தல் பிரச்சாரத்தில் ராகுல்காந்தி எச்சரிக்கை!

காஷ்மீர், செப்.27-

ஜம்மு - காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து கிடைக்கவில்லையெனில் INDIA கூட்டணி அழுத்தம் கொடுக்கும் என்று மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி தெரிவித்தார்.

யூனியன் பிரதேசமான ஜம்மு-காஷ்மீரில் மொத்தமுள்ள 90 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு, 10 ஆண்டுகளுக்கு பின் 3 கட்டங்களாக சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுகிறது. ஜம்மு - காஷ்மீர் யூனியன் பிரதேச சட்டசபை தேர்தலில் முதல் கட்ட தேர்தல் செப்டம்பர் 18ம் தேதி அமைதியான முறையில் நடைபெற்றது. இதில் 61.38 சதவீத வாக்குகள் பதிவாகியதாக இந்திய தேர்தல் ஆணையம் தனது இணையதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளது. இந்நிலையில், நேற்று முன்தினம் (செப்.25) ஜம்மு மற்றும் காஷ்மீர் சட்டமன்றத் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது.

இந்த தேர்தலில் பா.ஜ.க., காங்கிரஸ், மக்கள் ஜனநாயக கட்சி, தேசிய மாநாடு கட்சி ஆகியவை போட்டியிடுகின்றன.



காங்கிரஸும், தேசிய மாநாடு கட்சியும் கூட்டணியாக போட்டியிடுகின்றன. மூன்றாம் கட்டமாக 40 தொகுதிகளுக்கு அக். 1ம் தேதி தேர்தல் நடத்தப்படவுள்ளது. இதையடுத்து, அக். 8ம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

இந்நிலையில், 3ம் கட்டமாக 40 தொகுதிகளுக்கு அக். 1ம் தேதி நடைபெற உள்ள நிலையில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் ஜே.கே. ரிசார்ட் மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அதில் பேசிய ராகுல் காந்தி தெரிவித்ததாவது :

“இந்திய வரலாற்றில் ஒரு போதும் ஒரு மாநிலத்தின் மாநில அந்தஸ்தை பறித்துவிட்டு, அதனை யூனியன் பிரதேசமாக நாங்கள் மாற்றியதில்லை. மாநில அந்தஸ்தை மீட்டெடுக்க பா.ஜ.க. தவறினால், இந்தியா கூட்டணி மக்களவை, மாநிலங்களவை முதல் வீதிகள் வரையில் இறங்கி, அரசுக்கு அழுத்தம் கொடுக்கும். உள்ளூர் மக்களை ஓரங்கட்டி, லெப்டினன்ட் கவர்னர் மூலம் வெளியாள்களுக்கு பயனளிக்கும் வகையில், மாநில அந்தஸ்து ரத்து செய்யப்பட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீரின் முன்னேற்றத்திற்கு மாநில அந்தஸ்தை மீட்டெடுப்பது அவசியம். அது உங்கள் உரிமை; அதுதான் உங்கள் எதிர்காலம்”

இவ்வாறு அவர் பொதுக்கூட்டத்தில் பேசினார்.

## காஞ்சிபுரத்தில் செப்.28-ஆம் தேதி நடைபெறும் கழக பவள விழாவிற்கு

# காஞ்சிபுரம் வடக்கு - தெற்கு மாவட்டங்களில் இருந்து கழகத்தினர் திரண்டு வாரீர் !

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் - க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப். 27 -

கழக பவள விழாவைக் கொள்கை கூட்டணியுடன் கொண்டாடுவோம் கழக உடன் பிறப்புக்கள் அனைவரும் அண்ணா பிறந்த மண்ணில் அணிவகுப்போம் என்று தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் அன்பு அழைப்பை ஏற்று, காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில், நாளை (செப்டம்பர் 28ஆம் தேதி) மாலை நடைபெறும் கழக பவள விழாவில் காஞ்சிபுரம் வடக்கு தெற்கு மாவட்டத்தில் இருந்து மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு கிளை கழக நிர்வாகிகள், கழக அணிகளின் மாவட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் ஆயிரக் கணக்கில் அலைகடலென ஆர்ப்பரித்து திரண்டு வர வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா. மோ. அன்பரசன் மற்றும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் ஆகியோர் இணைந்து அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட “திராவிட முன்னேற்றக் கழகம்” என்ற பேரியக்கம், அண்ணாவின் கொள்கைத் தம்பிகளால் வளர்க்கப்பட்டு அவரது தம்பிகளில் தலையாய தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 50 ஆண்டுகளுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்டு,





நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக இயங்கி கொண்டிருக்கிற வேளையில் இன்றைக்கு தி.மு.கழகம் பவள விழா ஆண்டை நிறைவு செய்கிறது.

75 ஆண்டுகளை கடந்து பவள விழாவை நிறைவு செய்துள்ள தி.மு.கழகம் என்ற பேரியக்கம் வெற்றி தோல்விகளை கடந்து, தனது இலட்சியப் பாதையில் உறுதி குலையாமல் பயணித்து வரும் தி.மு.கவுக்கு எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் அதனை எதிர் கொண்டு, முதுகு வளையாமல், தரையில் தவழாமல், நெஞ்சை நிமிர்த்தி நின்று, “நான் தி.மு.க.காரன், நான் கலைஞரின் உடன்பிறப்பு, தளபதியின் அன்புத் தொண்டன்” என்று கம்பீரமாகச் சொல்கின்ற துணிவும் வலிவுமே கழகத் தொண்டர்களின் அடையாளம்.

அந்த கம்பீரத்துடன், பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம், தனது 75வது ஆண்டினை பவள விழாவாக கழக முப்பெரும் விழாவுடன் சேர்ந்து கடந்த 17ஆம் தேதி சென்னை நந்தனத்தில் கழக குடும்ப விழாவாக கொண்டாடி மகிழ்ந்தோம்.

வெற்றி மேல் வெற்றிகளை குவித்து வரும் நம்முடைய ஒப்பாரும் - மிக்காரும் இல்லா அன்புத் தலைவர் - தளபதி அவர்கள் நம் உயிரான கழகத்துடன் இணைந்து கொள்கை கூட்டணி அமைத்துள்ள இயக்கத்தினரையும் இணைத்து பேரறிஞர் பெருந்தகை பிறந்த காஞ்சி மண்ணில் கழக பவள விழாவை கொண்டாடிட வேண்டும் என்று பெரு மகிழ்ச்சியுடன் அறிவித்தார்.

நம்முடைய உயிரனைய தலைவர் அவர்களின் அன்பு கட்டளையை ஏற்று, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகமும் - தெற்கு மாவட்ட கழகமும் இணைந்து அண்ணா பிறந்த புனித பூமியில் - அண்ணா பயின்ற பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் அமைந்துள்ள விளையாட்டு திடலில் நாளை (28ஆம் தேதி சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் கழக கொள்கை கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்க உள்ள மாபெரும் கழக பவள விழா பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாநகரில் தி.மு.க கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்கும் தி.மு.கழக பவள விழா பொதுக்கூட்டத்தை, காஞ்சிபுரம் வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. இணைந்து, பார்ப்போர் அனைவரும் வியக்கும் வகையில் மிகவும் பிரம்மாண்டமான மேடை அமைத்து எழுச்சியுடன் மாநாடு போல நடத்த ஏற்பாடுகள் செய்து உள்ளோம்.

மிகவும் கோலாகலமாக நடைபெற உள்ள தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் அனைவரும் பங்கேற்கும் கழக பவள விழா மாபெரும் பொதுக் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு - தெற்கு மாவட்டத்தில் இருந்து மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அணிகளின் மாவட்ட ஒன்றிய நகர பகுதி பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த கழகத்தினரும் பல்லாயிரக்கணக்கில் அலைகடலென அணிதிரண்டு வந்து பங்கேற்றிட வேண்டும் என்று இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கிறோம்.

கழக பவள விழாவைக் கொள்கை கூட்டணியுடன் கொண்டாடுவோம் ! கழக உடன் பிறப்புக்கள் அனைவரும் அண்ணா பிறந்த மண்ணில் அணிவகுப்போம் !! என்று நம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் முதல்வர் கழகத் தலைவர் அவர்கள் அனைவரும் வாரீர் வாரீர் என்று வாஞ்சையுடன் அழைத்துள்ளார்.

இக்கொள்கை கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து, 40க்கு 40 என்று நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றது போல, வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200+ தொகுதிகளில் வெற்றியினை உறுதி செய்திட செப்டம்பர்28 அண்ணன் பிறந்த காஞ்சியில் நடைபெறும் கழக பவள விழாவில் காஞ்சிபுரம் வடக்கு தெற்கு மாவட்ட கழகத்தினர் காஞ்சி மாநகரமே குலுங்கிடும் வகையில், கொள்கைத் தீரர்களாக கழக கொடி ஏந்தி ஆயிரக்கணக்கில் பெரும் படையாக திரண்டு வந்து, எதிர் வரும் சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்கு அச்சாரமாக திகழும் வகையில், இப்பவள விழாவை வெற்றியடைய செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் - முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் கொள்கை கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்று சிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்துள்ள இம்மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துக்கொள்வது, “நமது உரிமை” - “நமது கடமை” என்ற அந்த உணர்வோடு, காஞ்சிபுரம் வடக்கு - தெற்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத் தோழர்கள் அனைவரும், செப்டம்பர் 28 ஆம் தேதி சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கெல்லாம் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலுக்கு அணி அணியாக திரண்டு வந்து பங்கேற்று சிறப்பிக்கும் படி இருகரம் கூப்பி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் .

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்ற பேரறிஞர் அண்ணாவின் வைர வரிகளுக்கு ஒப்பாக அண்ணன் பிறந்த காஞ்சி மாநகரில் இதுவரை, இதுபோன்ற பிரம்மாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது இல்லை என்று தமிழக அரசியல் வரலாற்றில் புதியதோர் சரித்திர சாதனையை படைத்திடுவோம் வாரீர் வாரீர் என்று அகமகிழ்ந்து அழைக்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.

## இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர், அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, செப்.27-

இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் ஆர்.காந்தி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் கழக ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்னும் முழக்கத்தை ஓங்கி ஒலித்து இந்திய ஒன்றியத்தில் முதன்மை மாநிலமாக முன்னெடுத்து சிறந்த முதலமைச்சராக திகழும் நமது கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் நமது மாவட்டத்திற்கு 28.09.2024 அன்று காலை 9.00 மணிக்கு வருகை தருகிறார்.

தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் - முதல்வர் அவர்களின் நல்லாட்சியில் TATA கார் உற்பத்தி தொழிற்சாலை 470 ஏக்கர் பரப்பளவில் இராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டையில் ரூ.9000 கோடி மதிப்பில் சுமார் 15,000 பேர் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள TATA கார் உற்பத்தி தொழிற்சாலை நாளை (28.09.2024 சனிக்கிழமை) காலை 9.00 மணிக்கு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் அடிக்கல் நாட்டு விழா நடைபெறவுள்ளது.

நமது மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழக முதல்வர் - கழக தலைவர் தளபதி அவர்களுக்கு 28.09.2024 அன்று காலை 9.00 மணிக்கு பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டை நுழைவு வாயிலில் எனது தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

வரலாற்று தலைவர் தளபதி அவர்கள் “கோபாலபுரம் இளைஞர் தி.மு.க.” ஆரம்பித்து மாநில இளைஞர் அணி குழுவில் இடம் பெற்று மாநில இளைஞர் அணி செயலாளராக, கழக துணை பொது செயலாளராக, கழக பொருளாளராக, சென்னை மாநகர மேயராக, தமிழக உள்ளாட்சி துறை அமைச்சராக, தமிழக துணை முதலமைச்சராக, கழக தலைவராக தமிழக பொது மக்கள் ஆத



ரவோடு தமிழக முதல்வராக பொறுப்பு வகித்து பொறுப்புகளுக்கு பெருமையை தேடி தந்தவர் தலைவர் தளபதி ஆவார்.

தமிழகத்தில் பொற்கால ஆட்சியை நடத்தி மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, பள்ளி மாணவர்களுக்கு காலைஉ உணவு திட்டம், இல்லம் தேடி கல்வி, புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மக்களுடன் முதல்வர் ஆகிய வரலாற்று திட்டங்களை செயல்படுத்தும் திராவிட மாடல் நாயகர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாய் மாநில முதல்வர்களில் முதல் முதல்வராய் சிறந்து விளங்கும் தலைவர் தளபதி அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிப்பது நமது தலையாய கடமையாகும்.

28.09.2024 சனிக்கிழமை மாலை 06.00 மணிக்கு காஞ்சிபுரத்தில் பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் நமது கழக தலைவரும் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்களும் கலந்து கொண்டு உரையாற்றும் தி.மு.க. பவள விழா பொது கூட்டத்திற்கு தமிழக முதல்வர் - கழகத் தலைவர் தளபதி அவர்கள் நம்மை அழைக்கிறார்.

எனவே, தமிழக முதல்வர் - தலைவர் தளபதி அவர்கள் நமது மாவட்டத்திற்கு வருகை தரும் வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் அன்று மாலை காஞ்சிபுரத்தில் நடைபெறும் தி.மு.க. பவள விழா பொது கூட்டத்திற்கும் மாவட்ட நிர்வாகிகள் நகர, ஒன்றிய செயலாளர்கள், நிர்வாகிகள், செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர்க் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட அணியின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், ஊர் கிளை, உட்கிளை, வட்ட கிளை நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, சுற்றுச்சூழல் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளரணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, தொ.மு.ச. ஆகிய அனைத்து அணியினரும் கழக தோழர்களும் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று சிறப்புற அமைய ஒத்துழைப்பு நல்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் ஆர். காந்தி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.